# வசந்த இதழ்
# Vasanta Ethal

KRISHNAMURTI FOUNDATION INDIA FEBRUARY 2015 - MAY 2015 Rs.2/- VOL X ISSUE 1


உள்பக்கம்


மனரீதியான காலம் என்பது எண்ணத்தின்............3

அறிவிப்பு..................................................6


## எண்ணம் இல்லாதபோது அழகு இருக்கிறது

**கிருஷ்ணமூர்த்தி :** நீங்கள் அதோ அந்தப் புல்வெளியில் இருக்கும் மரத்தைப் பார்க்கையில் என்ன தோன்றுகிறது? ஒரு பெண்ணின், ஒரு மேகத்தின் அல்லது ஒரு நீர்ப்பரப்பின் அலாதியான அழகைப் பார்க்கும் போது, அப்படியே சும்மா இருந்து விட முடியுமா? அல்லது அழகான ஒரு கருத்தை உருவாக்குகிறீர்களா? பார்க்கும் தருணத்தில் என்ன நடக்கிறது?

**மாணவன் :** வார்த்தைகளே இல்லை.

**கிருஷ்ணமூர்த்தி :** அப்படியென்றால்? எண்ணத்தின் இயக்கம் இல்லாத போது அழகு தோன்றுகிறது. இதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? (தலையசைக்கிறார்கள்). நீங்கள் எல்லோரும் ஒத்துக்கொள்கிறீர்கள். என்ன விநோதம்!

எனவே அழகான ஒன்றைப் பார்க்கும்போது எண்ணம் ஏதும் இருப்பதில்லை. இப்போது, அந்தக் கணத்திலேயே நின்று, அதிலிருந்து நகராமல் இருக்கமுடியுமா? மேகத் தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, மனம் பேசுவதில்லை - ஏனெனில், எண்ணம் இயங்குவ தில்லை. மிகவும் அசாதாரணமான, அழகான ஒன்றைப் பார்க்கையில் எண்ணம் சிறிதும் இருப்பதே இல்லை.

இப்போது மிகவும் கவனமாகப் பாருங்கள், கவனமாகக் கேளுங்கள். தயவு செய்து கவனமாகக் கேளுங்கள். மேகமானது, தன் ஒளியாலும், பிரகாசத்தாலும், பரந்த அளவாலும் உங்களை ஆக்கிரமித்து விட்டது, இதை உணருகிறீர்களா? மேகம் உங்களைக் கவர்ந்து உட்கிரகித்துக் கொண்டுவிட்டது. அதாவது, அந்த கிரகிப்பில், நீங்கள் ''மறைந்து'' போய்விடுகிறீர்கள். விளையாட்டுப் பொருளால் குழந்தை கவரப்படுகிறது. அந்தப் பொருளை நீக்கி விடுங்கள் - குழந்தை மீண்டும் விஷமம் செய்யத் தொடங்கிவிடுகிறது. அதேதான் இங்கும் நடந்திருக்கிறது. மேகம் உங்களைக் கவர்ந்தது - மேகம் மறைந்தவுடன் நீங்கள் மீண்டும் உங்களை உணருகிறீர்கள்.

இவ்வாறு ஒரு மலை, மேகம், மரம், பறவையின் குரல், நிலத்தின் அழகு போன்றவற்றால் கவரப்படாமல் வெறுமையாக இருக்க உங்களால் முடியுமா?

விளையாட்டுப் பொருளை நீக்கி விட்டால், குழந்தை விஷமத்தை மீண்டும் தொடங்குகிறது, கத்துகிறது. ஆனால் ஒரு விளையாட்டுப் பொருளைக் கொடுங்கள் - அது குழந்தையைக் கவர்கிறது. நான் கேட்கிறேன் - விளையாட்டுச் சாமான் இல்லாமல், உங்களைக் கவர்வதற்கு எதுவுமே இல்லாமல், உங்களின் ''மறைவு'' இருக்க முடியுமா? ஆகா! இதன் அழகைப் பாருங்கள்! உங்களுக்குப் புரிகிறதா?

எனவே, நீங்கள் ''இல்லாத'' போது, அழகு இருக்கிறது. எண்ணம் இல்லாதபோது, அழகு இருக்கிறது.

இப்போது - அன்பு என்பது எண்ணம் அல்ல, எண்ணம்தானா? இந்தத் தொடர்பை உணர ஆரம்பிக்கிறீர்களா?

நான் உங்களை நேசிக்கிறேன் - நீங்கள் என்னைக் கவர்ந்து விட்டீர்கள் - நீங்கள் எனக்குத் தேவை. நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள், நல்ல அழகான முடி இருக்கிறது. நீங்கள் என்னைக் கவர்ந்து விட்டீர்கள். நான் உங்கள் மீது காதல் கொண்டு விட்டேன். அதுதான் கவர்ச்சி. பிறகு உங்களை நான் பற்றிக் கொள்கிறேன். நான் உங்களை நேசிக்கிறேன். ஆனால் காலப் போக்கில் என் பழைய மனம் தன்னைத்தானே கண்டு வற்புறுத்திச் சொல்கிறது - இரண்டு ஆண்டு களுக்கு முன் அது அழகாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது எனக்கு அவனைப் பிடிக்கவில்லை. நான் அவளைக் காதலித்தேன் - ஆனால் இப்போது என்ன நடந்துவிட்டது!

தயவு செய்து இதன் உண்மை யைப் பாருங்கள் - எங்கே அழகு இருக்கிறதோ, அங்கே எண்ணம் முழுமையாக மறைந்து விடுகிறது. எனவே, அன்பு என்பது ''என்னு டைய'' முழுமையான மறைவுதான். புரிந்ததா? புரிந்ததென்றால் வாழ்க்கை ஊற்றைப் பருகிவிட்டீர்கள் நீங்கள்.

**மாணவன் :** இந்த உணர்ச்சி, ஒருவர் கவரப்படுவதையும் உள்ளடக்கியதா?

**கிருஷ்ணமூர்த்தி :** உணர்ச்சி என்றால் என்ன? எண்ணம் இல்லையென்றால் உங்களுக்கு ஏதேனும் உணர்ச்சி இருக்குமா? இதைக் கவனமாகப் பாருங்கள். உற்றுப் பாருங்கள். அழகு ஓர் உணர்ச்சியா? அழகு என்பது எண்ணம் இல்லாதது என்றோம். எண்ணம் இல்லாதபோது ஏதேனும் உணர்ச்சி இருக்கிறதா? இதன் சாரத்தை, உட்பொருளை உணருங் கள், மற்ற விவரங்களை விட்டு விடுங்கள். விரிவான விவரங்களைப் பின்னால் பார்க்கலாம். இந்த ஒரு பொருளின் உண்மையைப் பாருங்கள் - அது என்னவென்றால்:

அழகு இருக்கும்போது எண்ணம் இருப்பதில்லை. அன்பு இருக்கும் இடத்தில் ''நான்'' மறைந்து இருக்கிறேன்.

பிரச்சினைகள், கவலை, பயம் இவற்றில் வீழ்ந்து கிடக்கும் ''நான்'' - அந்த நான் ''மறைந்து'' நிற்கும்போது, அன்பு இருக்கிறது.

**மாணவன் :** நீங்கள் ஒரு மேகத்தைப் பார்க்கிறீர்கள், அது மறைந்து போய் விடுகிறது. பிறகு நீங்கள் உங்கள் நிலைக்குத் திரும்புகிறீர்கள்.

**கிருஷ்ணமூர்த்தி :** சிறுமிக்கு பொம்மை தந்து பார்த்திருக்கிறீர்களா? அவள் மிகவும் சந்தோஷமாக, அமைதியாக இருக்கிறாள், தவிப்பதில்லை, அழுவதில்லை. சிறுவனிடம் ஒரு சிக்கலான விளையாட்டுப் பொருளைக் கொடுங்கள். அதை வைத்துக்கொண்டு ஒரு மணி நேரம் விளையாடிக் கொண்டிருப்பான். விஷமத்தனத்தை அவன் மறந்து விட்டான். பொம்மை, விளையாட்டுப் பொருள் எல்லாம் முக்கியமாகி விட்டன. நீங்கள் மேகத்தைப் பார்க்கையில், வானத்தில் பறவை பறப்பதைப் பார்க்கையில், என்ன நிகழ்கிறது? உங்கள் பேச்சு நின்று போய் விடுகிறது. நீங்கள் ஒரு மேற்கத்திய சினிமாப் படம் அல்லது ஏதேனும் ஒரு சினிமாவைப் பார்க்கும் போது, நீங்கள் அதையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் பிரச்சினைகள், கவலைகள், பயம் இவற்றைப் பற்றி எண்ணுவதே இல்லை. நீங்கள் சினிமாவால் கவர்ந்து இழுக்கப்பட்டு விட்டீர்கள். சினிமாவை நிறுத்தினால், நீங்கள் உங்கள் நிலைக்குத் திரும்பி விடுகிறீர்கள்!

இதை இன்னும் சற்று ஆராய்ந்து நோக்கினால் - கருத்துகள் உங்கள் விளையாட்டுப் பொருள்களே; குறிக்கோள்கள், உங்கள் விளையாட்டுப் பொருள்களே - இவை உங்களை முழுவதுமாகக் கவர்ந்து, ஆக்கிரமித்துக் கொண்டு விடுகின்றன. மதங்கள், உங்கள் விளையாட்டுப் பொருள்கள். இவற்றைப் பற்றியெல்லாம் கேள்வி கேட்டால், நீங்கள் உங்கள் நிலைக்குத் திரும்பி விடுகிறீர்கள்; அமைதி இழந்து பயம் கொள்கிறீர்கள்.

**மாணவன் :** இதனின்றும் நீங்கி வெளியே, விளையாட்டுப் பொருள்களின் உலகுக்கு வெளியே, எந்த ஒரு பொருளும் இல்லையா?

**கிருஷ்ணமூர்த்தி :** நான் உங்களுக்குக் காட்டினேனே! தயவு செய்து கவனமாகக் கேளுங்கள். எண்ணம்தான் இவ்வுலகை உருவாக்கியிருக்கிறது என்று சொன்னோம். யுத்தம், வியாபாரி, அரசியல்வாதி, கலைஞன், வஞ்சகன் - அனைவரையும் சமூகமே உருவாக்கியிருக்கிறது. நம்மில் ஒருவருக்கொருவரிடையே உள்ள உறவுதான் சமூகம் - இது எண்ணத்தின் அடிப்படையில் அமைந்தது. எனவே எண்ணம்தான் இந்த பயங்கரமான குழப்பத்திற்குக் காரணம். அப்படித்தானோ? அல்லது இதுவும் ஒரு கருத்தா? இதை ஒரு கருத்து என்று நீங்கள் சொன்னால், நீங்கள் வாஸ்தவமான இந்த உண்மையைப் பார்க்கவில்லை என்றுதான் பொருள்.

எனவே, அதிலிருந்து விலகுங்கள். எண்ணம், துண்டு துண்டாகக் கிடக்கிறது என்று சொன்னோம். அது எதைச் செய்தாலும் அது துண்டு துண்டாகிப் போய்விடும். நான் இங்கே அமர்ந்திருப்பது எவ்வளவு உண்மையோ, அதைப் போன்றே இதையும் உண்மையான ஒன்றாகப் பார்க்கிறீர்களா?

**மாணவன் :** அதெல்லாம் இயந்திர மயமான எண்ணம். ஆனால் அதைப் பயன்படுத்தும் ஏதோ ஒன்று, அதன் பின்னே இருக்கிறதா?

**கிருஷ்ணமூர்த்தி :** உங்களுக்கு இயந்திரமயமான எண்ணத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. அந்த இயந்திர மயமான எண்ணம் நின்று விட்டால் - பிறகு வேறு ஏதேனும் இருக்கும். ஆனால், ''அது இயந்திர மயமான எண்ணம், எனவே இன்னொன்றைப் பார்ப்போம்'' என்று உங்களால் சொல்ல முடியாது. எண்ணம் நின்றே ஆகவேண்டும் - நிற்கும் - உதாரணமாக, நீங்கள் அழகைப் பார்க்கும்போது, பனி மூடிய சிகரங்களைக் கொண்ட பரந்த மலைத் தொடரைப் பார்க்கும் போது - அதன் கம்பீரம், அழகு இவை உங்களைக் கவர்ந்து ஆக்கிரமித்துக் கொள்கின்றன. அந்த மலை அங்கு இல்லையென்றால் உங்கள் எண்ணங்களினால் நீங்கள் உங்கள் சண்டை சச்சரவுகளுக்குத் திரும்புகிறீர்கள். தயவு செய்து நீங்களே இதைக் கண்டு கொள்ளுங்கள். உட்காருங்கள். தியானம் செய்யுங்கள். அதில் ஆழ்ந்து விடுங்கள்.

**மாணவன் :** எல்லாம் சரிதான். ஆனால்...

**கிருஷ்ணமூர்த்தி :** எல்லாம் சரிதான், ஆனால், 'நான் என் மாமா வீட்டுக்குத் திரும்ப வேண்டும். மாமி, அன்னை, பாட்டியைப் பார்க்க வேண்டும். பணம் சம்பாதிக்க வேண்டும். மற்றதெல்லாம் செய்ய வேண்டும்' என்று நீங்கள் சொல்கிறீர்கள். நம் எல்லோருக்கும் அதுதான் பிரச்சினை. எனவே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? தொழில் நுணுக்கம் மற்றும் நடைமுறை விஷயங்கள் தவிர மற்றவற்றில், எண்ணம்தான் மிகவும் விஷமத்தனமான ஒரு பொருள். உறவுகளிடையே அது மிகவும் கொடிய பொருள் - அதனால் அது அன்பையும் அழிக்கக் கூடியது - என்பதையெல்லாம் உண்மையாகவே உணரும் போது, கண்டு கொள்ளும்போது... என்னதான் செய்யப் போகிறீர்கள்? நீங்கள் பணம் சம்பாதிக்க வேண்டும், ஒரு வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும் - இதெல்லாம் எண்ணத்தை உருவாக்கும். அங்குதான் நீங்கள் எண்ணத் தொடங்குகிறீர்கள். பல் வைத்தியரிடம் செல்ல வேண்டியிருந்ததால், அதைப்பற்றி எண்ணுகிறீர்கள். ஒரு சூட் அல்லது சட்டை வாங்க வேண்டியிருந்தால், வெவ்வேறு துணிகளை ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள் - இது சிறந்ததா, அது சிறந்ததா என்றவாறு - அதற்கு எண்ணித்தான் ஆகவேண்டும். ஆனால், உறவுகளிடையே எண்ணம் என்பது கொடியது என்பதை நீங்கள் உணருகிறீர்கள். அவ்வளவே.

அக மலர்ச்சி,
p. 20-25

# மனரீதியான காலம் என்பது எண்ணத்தின் கண்டுபிடிப்பு

இன்று காலை, அபரிமிதமான சிக்கல் மிகுந்த பிரச்சினையான ‘வாழ்க்கையின் அர்த்தம் யாது?’ என்பது பற்றியும், காலத்திற்கு அப்பாலும், நாளை என்பதற்கப்பாலும், நினைவின் அபரிமிதமான சுமைக்கு அப்பாலும் ஏதேனும் ஒன்று உளதா என்பது பற்றியும் நம்மால் ஒன்று சேர்ந்து விசாரணை செய்ய இயலுமா? புலன்களையே அடிப்படையாகக் கொண்டு வெறுமனே மேலோட்டமாகப் போய்க் கொண்டிருக்கின்ற வாழ்க்கைக்கும் அப்பால் அதி உன்னதமான ஏதேனும் ஒன்று உளதா? இதை விசாரிப்பதற்கு நமக்கு சுதந்திரம் தேவை. அது எத்தன்மையுள்ள சுதந்திரமெனில், எந்த ஒரு குறிப்பிட்ட அனுபவத்தையும் பற்றிக் கொள்ளாமல், அனுபவத்துடனும் இணைந்து கொள்ளாமல், ‘இன்னும் அதிகம் வேண்டும்’ என்று கேட்காததாகவும் இருத்தல் அவசியம்.

சமயம் என்று கூறப்படுவதை நாம் அதனுள் சென்று விசாரணை செய்து கொண்டிருக்கின்றோம். நாம் பயம், இன்பசுகம், துன்பம் ஆகியவற்றைப் பற்றியும், பின்னர், மரணம் என்ற முழுப் பிரச்சினையையும் ஓரளவிற்கு ஆராய்ந்திருக்கிறோம், ‘சமயம் என்றால் என்ன?’ என்ற கேள்வியையும் நாம் வெகு ஆழமாக ஆராய்வது அவசியம் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில், மனிதன் அதைச் சார்ந்தே வாழ்ந்து வந்திருக்கிறான்.

அன்றாட வாழ்க்கையில் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்பம், துன்பம், கவலை, காமம் போன்ற நிஜத்தில் அனுபவிக்கும் விஷயங்களுக்கு அப்பாற்பட்டதாகவும் உன்னதமான ஒன்றாகவும் ஏதேனும் இருக்கிறதா என்பதே மனிதனின் தேடலாக இருந்து வந்திருக்கிறது. அதைத்தான் அவன் ‘கடவுளைத் தேடல்’, ‘சத்தியத்தைத் தேடல்’ என்றெல்லாம் கூறி வந்திருக்கிறான். இந்தத் தேடலையே ஆசியா கண்டத்தில், நிர்வாண நிலை, மோட்சம், முக்தி, ஞானோதயம் என்று பலவாறாக அழைக்கின்றனர். இதுவே சிரத்தை மிக்க மனிதர்களின் மாறாத, ஆழமான தேவையாக இருந்திருக்கின்றது. அத்தேவையின் தேடலில் மனிதன் அகப்பட்டுக் கொள்கிறான். அவன் ஒரு மதத்தில் சேருகிறான், அதை முற்றிலுமாகப் புறக்கணித்து மற்றொரு மதத்திற்கு சென்று சேருகிறான், அதையும் புறக்கணிக்கின்றான்; இப்படிப் பலவகையான பொறிகளில் பிடிபட்டிருக்கிறான்.

அவனுடைய தேடல் முடிவடைகின்ற போது, அவன் மரணத்தைத் தழுவும் தருவாயில், ‘‘நான் ஒன்றையும் கண்டு பிடிக்கவில்லை,’’ என்று கூறுகிறான். உங்களுக்குப் புரிகிறதா? ‘‘நான் இந்தக் குரு, அந்தக் குரு, இந்தக் கோயில், அந்தத் தேவாலயம் என்று போய்க் கொண்டிருந்தேன், மூடநம்பிக்கைகள் நிறைந்த பாதிரிமார்கள், கோயில் குருக்கள் இவர்களையெல்லாம் பின்பற்றினேன், இன்னும் இப்படிப் பல செய்து கொண்டிருந்தேன்’’ என்கிறான். இது எல்லாவற்றிற்கும் முடிவினில், அவன் இறந்துபடும் தருணத்தில், ஒன்றுமே இல்லை என்பதை உணர்கிறான்.

ஆகவே, நம்முடைய விசாரணையில் நீங்கள் சிரத்தையுடனிருக்கின்றீர்கள் எனில், இவை யாவற்றையும் ஒதுக்கித் தள்ள முடியுமா? ஏனெனில், மனிதனால் அமைக்கப்பட்ட எல்லா மதங்களுமே எண்ணத்தால் ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்டது. எண்ணமானது, நாம் அதனுள் சென்று அன்று ஆராய்ந்தபடிக்கு, அறிவின்மையுடன் கூடவே செல்லும் அறிவையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அது வரையறைக் குட்பட்டது; முழுமையான அறிவு என்பது இல்லை - சரிதானே? - ஆகவே, அறிவற்ற தன்மை அதில் உள்ளது, அத்தன்மையின் அடிப்படையிலிருந்துதான் அறிவே இருக்கின்றது - எண்ணம் அறிவினின்றும் அனுபவங்களினின்றும் பிறக்கின்ற காரணத்தாலேயே அது நிரந்தரமாக வரையறைக்குட்பட்டதாகவே உள்ளது. கிறிஸ்தவ தேவாலயங்கள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள், விஞ்ஞானம், இலக்கியம், ஓவியம் இவையாவற்றையும் படைத்தது எண்ணமே. மேலும், கிறிஸ்தவ தேவாலயங்கள், கோயில்கள், மசூதிகள் இவற்றினுள் இருக்கின்ற எல்லா விஷயங்களையும் உருவாக்கினதும் எண்ணமே. இதில் எந்த சந்தேகமும் கிடையாது. ‘‘இவற்றை இரட்சகர்கள் அமைத்தனர்’’, என்று நீங்கள் கூறலாம். ஆனாலும், அது இன்னும் எண்ணத்தின் இயக்கமே தான். இப்படி மேலும் சொல்லிக் கொண்டே போகலாம். நம்மால் அதை மிகத் தெளிவாகப் பார்க்க முடியுமா? சொல்லளவிலோ அல்லது அறிவு பூர்வமாகவோ அன்றியும் ஒரு கட்டாயத்தின் பேரிலோ இல்லாமல் இந்த உண்மையைப் பார்க்க முடியுமா? எண்ணத்தால் படைக்கப்பட்ட விஷயங்கள் அனைத் தும் மாயைகளாயிருந்த போதிலும் உண்மையில் உள்ளன என்ற நிஜத்தைப் பார்க்க முடியுமா? நான் அச்சொல் ‘ரியலிடி’ (reality) என்பதனை ‘இது உண்மையில் உள்ள பொருள்’ (this is real) என்ற அர்த்தத்தில் பயன்படுத்துகிறேன். இந்த நபரின் முன் உள்ள நுண்ணொலிபெருக்கி (microphone) உண்மையில் உள்ளது, ஸ்தூலமாக உள்ள பொருள், நீங்கள் அதனைத் தொட முடியும். அவ்வண்ணமே, சமயம் என்று மனிதனால் அழைக்கப்பட்ட, எண்ணம் உருவாக்கிய விஷயங்களும், அவனால் சமயம் என்று கூறப்படுகின்ற எண்ணத்தால் கட்டமைக்கப்பட்ட விஷயங்களும் இருக்கின்ற உண்மைகள்; அந்தச் சடங்கு, இருக்கின்ற ஒரு நிஜம், அவர்கள் அணியும் பலவகைப்பட்ட நூதனமான அங்கிகளும் உண்மையில் உள்ளவை, அதனால் அது நிஜம். அந்தச் சின்னங்கள், கருத்துக்கள் அவையும் நிஜங்கள், இல்லையா? மாயைகளும் இருக்கின்ற

உண்மைகள். ஏனெனில், எண்ணமே அந்த மாயைகளைத் தோற்றுவித்திருக் கின்றபடியால், நீங்கள் இவற்றை எல்லாம் புரிந்து கொள்கிறீர்களா?

ஆகவே, மாயைகளும், கற்பனை மிக்க கருத்துக்களும், எல்லாச் சடங்குகளும், இவ்வாறாக எண்ணத் தால் ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்ட ஒவ்வொரு விஷயமும் நிஜமாக இருக்கின்ற ஒன்று. அந்தத் துப்பாக்கி களும், அந்த நீர்மூழ்கிக் கப்பல்களும், நிலவுக்கு செல்வதும், இன்னும் இப்படிப் பல விஷயங்களனைத்தும் உண்மையில் இருக்கின்ற நிஜங்கள். ஆனால், அந்த இருக்கின்ற நிஜம் எண்ணத்தால் படைக்கப்பட்டதே, சரிதானே? எண்ணம் இயற்கையைப் படைக்க வில்லை. ஆகவே, இயற்கை உண்மையில் இருக்கின்றது, நிஜம். ஆனால், அது எண்ணத்தால் உருவாக்கப்பட்டதல்ல. ஆனால், எண்ணமானது இயற்கையைப் பயன் படுத்திக் கொள்ளலாம். ஒரு நாற்காலியை உற்பத்தி செய்யலாம், அது இருக்கின்ற நிஜமாகின்றது.

எனவே, சமயம் என்கிற விஷயத்தினுள்ளும், மற்றும், எல்லாவற்றிற்கும் அப்பால் ஏதேனும் ஒன்று உளதா என்ற கேள்வியினுள் ளும் சென்று ஆராயும்போது, ஒருவர் உண்மையில் இருக்கின்ற நிஜம், அதில் மாயைகளும் உள்ளடக்கம் - அவற்றை இயற்கையினின்றும் வேறுபடுத்திப் பார்த்தல் அவசியம், சரியா? நீங்கள் இவற்றைப் புரிந்து கொள்கிறீர்களா? அவையாவும் இருக்கின்ற நிஜங்களே, ஆனால், எண்ணம் இயற்கையைப் படைக்க வில்லை. ஒருவருக்கு அந்த விஷயத்தில் மிகுந்த தெளிவு இருக்கு மாயின், நாம் இந்த விசாரணையை மேலும் தொடரலாம். எண்ணத்தின் படைப்பாக இல்லாத ஏதோ ஒன்று உளதா? இந்தப் பேச்சை ஆரம்பிக்கின்ற பொழுதே நம்மையே நாம் கவனித்தல் அவசியம் என்று கூறினேன். எங்கு ஒருவர் தடுக்கப் படுகின்றார், எங்கு ஒருவர் ஒரு அனுபவத்தின் மீதோ, இல்லை, ஒரு ஆசையின் மீதோ பற்று கொண்டிருக்கிறார் என இப்படிப் பல வற்றையும் தனக்குள்ளேயே ஒருவர் கவனித்தல் அவசியம். விசாரணை செய்து கொண்டிருக்கின்றீர்க ளெனில், அத்தகைய பற்றுகளை நீங்கள் ஒதுக்கித் தள்ள வேண்டும். விசாரணையில் உங்களுக்கு சுதந்திர மாகப் பார்க்கும் சுதந்திரம் இருக்க வேண்டும். நீங்கள், ''நன்று, நான் கடவுளில், ஏசுவில், கிருஷ்ணரில் அல்லது வேறு ஏதோ ஒன்றில் நம்பிக்கை வைத்துள்ளேன்,'' என்று இந்த விசாரணையில் கூறமுடியாது. அப்படிக் கூறினால், நீங்கள் தந்திரமாக விளையாடுகிறீர்கள் என்றாகி விடும். நீங்கள் உங்களின் மீதே தந்திரங்களைப் பிரயோகிக்கலாம். ஆனால், சிரத்தையுடன் விசாரிக்கின்ற போது நீங்கள் உள்ளவாறு நோக்க வேண்டும். ஆக, எண்ணத்தினின்றும் உருவாக்கப்படாத ஒன்று உளதா? அதன் பொருள் யாதெனில், ''காலத்திற்கு அப்பால் ஏதேனும் ஒன்று உளதா?'' என்பதே. தயவு செய்து மெல்ல செல்லுங்கள், நாம் விசாரணை செய்யப் போகிறோம். 'பரிணாம வளர்ச்சி' என்ற கருத்துக்கு நாம் பரிச்சயமாகியிருக்கின்றோம். அதாவது, முதலில் பௌதீக ரீதியான பரிணாம வளர்ச்சி. அதாவது ஒக் மரத்தின் விதை, முளைத்து, பெரிய மரமாவதற்கு பன்னெடுங்கால மாகிறது. மனோரீதியாகவும் ஒருவர் கற்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் காலம் தேவைப்படுகிறது, கடினமாக இருக்கின்ற ஒன்றைக் கிரகித்துக் கொள்வதற்கு ஒருவருக்கு காலம் தேவை. ஆகவே, நாம் பரிணாம வளர்ச்சி என்கிற கருத்துக்கு, காலம் என்பதற்கு பழக்க மாகிவிட்டோம், சரிதானே? எனவே, மனோரீதியான காலம் இருக்கிறதா என்பதைப் பற்றி நாம் மிகத் தெளிவாக இருப்பது அவசியம். பௌதிக ரீதியான காலம் உள்ளது, அல்லது, கடிகாரப்படி இருக்கின்ற காலம் உள்ளது. இங்கிருந்து அந்த வீட்டிற்கு செல்வதற்கு பௌதிக ரீதியாக சரியாக மூன்றே நிமிடங்கள் பிடிக்கும். எனவே, பௌதிக ரீதியாக காலம் இன்றியமையாததாய் இருக்கின்றது. ஒரு இலக்கிலிருந்து இன்னொரு இலக்கினைச் சென்றடைவதற்கு காலம் தேவைப்படுகிறது. அது அந்தத் தூரத்தைக் கடப்பதற்குண்டான காலம்.

இப்போது, நாம் அதே முடிவினை மனோரீதியாகவும் எடுத்துக் கொண்டு விட்டோம். 'நான் அறியாமையில் இருக்கிறேன்' 'என்னையே நான் அறியேன், எனக்கு கால அவகாசம் தேவை'. இப்போது காலமானது மனோரீதியாக எண்ணத்தால் அங்கே புகுத்தப்படுகிறது. உண்மையிலேயே உங்களுக்கு சுதந்திரமாக இருப்பதற்கு கால அவகாசம் தேவையா? உதாரணத்திற்கு, பேராசையினின்றும் சுதந்திரமாக இருப்பதற்கு? அதனை நான் உதாரணத்திற்காக எடுத்துக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு உண்மையிலேயே காலம் தேவைப் படுகிறதா? அப்படியென்றால், எதிர் காலமாயிருக்கின்ற காலம் என்ப தாகும். பொறாமை, கவலை, பேராசை, பகைமை இவற்றினின்றும் விடுபட்டு சுதந்திரமாக இருப்பதற்கு உங்களுக்கு எதிர்காலம் தேவையா? உண்மையில் உங்களுக்கு காலம் தேவையா? இல்லை, இல்லை, தலையசைக்கா தீர்கள், நாம் அதற்கு பழக்கப்படுத்திக் கொண்டு விட்டோம். 'நான் அதனின்றும் வெளிவந்து விடுவேன்' என்று நீங்கள் கூறும்பொழுது, 'வருவேன்' (ஆங்கிலத்தில் "will") என்பது காலமே. உங்களுக்குப் புரிகிறதா? உங்களுக்கு புரிகிறதா என்பது எனக்கு சந்தேகம்தான்.

ஆக, நான் என்னுடைய கோபத்தை, என்னுடைய பொறா மையை, என்னுடைய ''போதாது'' என்கிற உணர்வினை வென்று விடு வேன் என்று இப்படி எத்தனையோ விஷயங்களில் கூறிக் கொள்வது நம்முடைய அன்றாடப் பழக்கமாகவும், வழிவழியே வந்த பாரம்பரிய பழக்கவழக்கமாகவும், நம்முடைய வாழ்க்கை முறையாகவும் இருக்கின் றது. எனவே, மனமானது, மனோ ரீதியாக காலம் என்ற கருத்திற்கு, அதாவது, நாளை அல்லது பல நாளைய தினங்கள் என்கிற

கருத்திற்குப் பழக்கமாகி விட்டது. இப்போது நாம் அதைப் பற்றித்தான் வினா எழுப்புகின்றோம். உங்களுக் குப் புரிகிறதா? அது தேவையில்லை என்று நாம் கூறிக் கொண்டிருக்கி றோம். பேராசையை ஒதுக்கித் தள்ளி சுதந்திரமாக இருப்பதற்கு கால அவகாசம் தேவையில்லை. சரிதானே? அதாவது, பேராசையுடன் இருக்கும் நீங்கள் காலத்தினின்றும் விடுபட்டி ருந்தால், நாளை என்பது அங்கு இல்லை. அந்நிலையில் பேராசையை நீங்கள் எதிர்க்கொண்டு தாக்குவீர்கள். நீங்கள் செயல்படுவீர்கள், உடனடியாக ஏதேனும் செய்வீர்கள். உங்களுக்கு இவையெல்லாம் புரிகின்றதா என்பது எனக்குத் தெரியவில்லை. எனவே, மனோரீதியாக எண்ணமானது, எது ஒன்றையும் தவிர்ப்பதற்குண்டான உபாயமாகவும், எதனையும் ஒத்திப் போடுவதற்கேற்ற உபகரணமாகவும், தன்னிடம் இருக்கின்றதிலேயே தொடர்ந்து உழன்று கொண்டிருப்ப தற்கு ஏதுவான கருவியாகவும் காலத்தைக் கண்டு பிடித்திருக்கின் றது. ஆக, எண்ணமானது, சோம்பேறித் தனம், இன்னும் மற்ற பலவற்றிலி ருந்து, மனோரீதியான காலம் என்பதனைக் கண்டு பிடித்துள்ளது. இப்போது, உங்களால் மனோரீதியாக நாளை என்ற கருத்தினின்றும் விடுபட முடியுமா? தயவுசெய்து, நீங்கள் இதனுள் சென்று அதனைப் பார்க்க வேண்டும். உங்களுடைய சொந்தக் கவலையையே எடுத்துக் கொள்ளுங் கள், அல்லது, உங்களுடைய பாலின்பப் பழக்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அதன் அடிப்படையி லேயே நீங்கள் சிந்திக்கின்றீர்கள், அதனை அடைந்து விடுகிறீர்கள். அவ்வாறு அடைதல் காலத்தின் இயக்கமே. உங்களால் அதிலுள்ள உண்மையைப் பார்க்க முடிகின்றதா? எண்ணத்தைக், காலத்தை முடிவுக்குக் கொண்டுவரும் விதத்தில் பார்க்க முடியுமா? நாம் பேசிக் கொண்டிருக்கும் போதே இதனை நீங்கள் செய்கின்றீர் களா? அவ்வாறில்லையெனில், இது வெறுமனே ஒரு கருத்தாக மட்டுமே இருக்கும்.

ஆக, மனம், காலம் என்ற பிரச்சினையினுள் சென்று விசாரித் திருக்கிறது; இது சிக்கல் மிகுந்த ஒன்று. நாம் அதனை வெகு சுருக்கமாகக் கூறுகின்றோம். அதாவது, நாளைய தினம் என்பது ஒரு இலக்கினை அடைவதற்கு பயன்படும் கருவி. மனோரீதியான காலம் என்கிற கருத்துரு, உண்மையில் இல்லாத மாயத் தோற்றமே. ஆகையால், காலமாகிய இடைவெளி இன்றி பார்த்து உணர்தலும், செயல்படுதலும் மட்டுமே இருக்கின்றது. உணர்வி லுள்ள அபாயத்தினை ஒருவர் பார்க்கின்றார். அந்த அபாயம், போர் மற்றும் பலவற்றின் காரணத்தால் ஏற்படுகின்ற அபாயம். அதனைப் பார்த்து உணர்தலே செயல்படுவ தாகும். மேலும் அந்தப் பார்த்து உணர்தலே, குறிப்பிட்டதொரு குழுவின்பால் கொண்டிருக்கும் பற்றுத லான உணர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வந்து விடுகின்றது. சரிதானே? நீங்கள் அதனைச் செய்கிறீர்களா? தினந்தோறும் பிரிட்டனில் மாலை நேரத் தொலைக்காட்சியில், ‘பிரிட்டிஷ், பிரிட்டிஷ், பிரிட்டிஷ்,’ என்று கூறிக் கொண்டிருக்கின்றனர். அல்லது ‘பிரஞ்ச் பிரஞ்ச் பிரஞ்ச்’ என்று கூறுகின்றதை ஒருவர் பிரான்ஸ் நாட்டிலிருக்கும்போதெல்லாம் பார்க்கின்றார். இப்படியாக இன்னும் பலவிருக்கின்றன. இத்தகைய பாகுபாடு நாசத்தையே விளைவிக்கும் என்பதனைப் பார்த்து பின்னர், ‘‘நான் ஒரு பிரிட்டிஷ் என்று சிறு வயதி லிருந்தே கட்டுப்படுத்தப்பட்டு பழக்கப்படுத்தப்பட்டிருக்கின்றேன். அந்தக் கட்டுப்பாட்டிலிருந்து வெளி வருவதற்கு எனக்கு கால அவகாசம் தாருங்கள்’’ என்றெல்லாம் கூறிக் கொண்டிராமல், காலம் என்ற கருத்தினைப் புகுத்தாமல் பார்க்க முடியுமா? நீங்கள் இதனைச் செய்ய வேண்டுமென நான் விரும்புகிறேன். ஆகையால், அதுவே போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விடுகிறது. நீங்கள் புரிந்து கொள்கிறீர் களா? அதாவது, விடுதலை பெற வேண்டும் என்கிற கடும் முயற்சியில் நாம் ஓரளவேனும் ஒருமித்து இருக்கி றோமா? நீங்கள் அவ்வண்ணம் இல்லை என்பதை நான் காண்கிறேன். ஏனெனில், இதற்கு சிரத்தைமிக்க ஒரு மனம், ‘‘நான் கண்டறிய விழை கிறேன்,’’ எனக் கூறுகின்ற ஒரு மனம் உண்மையில் தேவைப்படுகிறது.

ஆகையால், காலத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதே தியானமாகும். ஏனெனில், அதைத் தான் நாம் இப்போது சற்று நேரத்திற்கு முன்னால் செய்து கொண்டிருந்தோம்; நாம் தியானித்துக் கொண்டிருந்தோம்; காலத்தின் தன்மையைக் கண்டு பிடிப்பதற்காகத் தியானம் செய்து கொண்டிருந்தோம். காலம் என்பது உள்ளது; இங்கிருந்து அங்கு செல்வ தற்கு அது தேவையும் கூட. ஆனால், மனோரீதியாக காலம் என்பது இல்லை. அதைக் கண்டுபிடித்தால், அது அளவிட முடியாததாக இருக்கின்ற சத்தியம், அது பேருண்மை. ஏனெனில், நாம் எல்லாவிதமான பழக்கவழக்கங்களையும் உடைத் தெறிந்து அவற்றினின்றும் விலகிச் சென்றுவிட்டோம். உங்களுக்கு புரிகிறதா? பாரம்பரியம், ‘கால அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள், காத்திருங்கள், நீங்கள் இன்னன்ன செய்தால் அல்லது அதைச் செய்தால் கடவுளை அடைவீர்கள்’ என்றெல் லாம் கூறுகிறது. மேலும் அதன் பொருள் யாதெனில், நம்பிக்கை மற்றும் எதிர்ப்பார்ப்பு. அந்த நம்பிக்கை/எதிர்ப்பார்ப்பு முடிவுறு கிறது. உங்களுக்குப் புரிகிறதா? டான்டேயின் இன்ஃபெர்னோ (Dante's Inferno) வின் பொருள், ‘எதிர்ப்பார்ப்பினை/நம்பிக்கையை முடிவுக்குக் கொண்டுவருவது’ என்பதே - உங்களுக்கு புரிகிறதா? நாம் கூறிக் கொண்டிருப்பது, எதிர்ப்பார்ப்பு/நம்பிக்கை எனில் அது எதிர்காலத்தைக் குறிக்கின்றது. அதாவது ஒருவர் மன உளைச்சலில் இருக்கின்றார், சொல்ல முடியாத அளவுக்கு பற்றாக்குறை உணர்வோடு இருக்கின்றார்; அவர் முன்னேறு வதற்கு, கற்றுக் கொள்வதற்கு,

விடுபட்டு சுதந்திரத்துடன் இருப்பதற்கு 'எனக்கு நம்பிக்கையைத் தாருங்கள்.' என்றெல்லாம் கூறலாம், எனவே, மனோரீதியாக எதிர்காலம் என்பது இல்லை என்பதனை நீங்கள் பார்த்தீர்களென்றால் பின்னர் நீங்கள் உள்ளவற்றோடு தான் செயல்பட்டுக் கொண்டிருப்பீர்கள், உள்ளவற்றைத் தான் கையாள்வீர்கள். நம்பிக்கைகளுடனல்ல, எதிர்ப் பார்ப்புகளுடனல்ல. நீங்கள் இதைப் பார்க்கின்றீர்களா? ஏனெனில், நம்பிக்கை/எதிர்ப்பார்ப்பு என்பது காலமே. சரிதானே?

ஆக, காலம் என்பதனுள் சென்று விசாரிக்கும் பொழுது நாம் என்ன செய்தோமோ அதுதான் தியானத்தின் ஆரம்பம். அதுவும் தியானத்தின் ஒரு பகுதி ஆகும்.

ப்ராக்வுட் பார்க், 02.10.1979
Talk 4

## அறிவிப்பு

## வசந்தா மகளிர் கல்லூரி முதல்வர் பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன
## கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷன் இந்தியா
## ராஜ்காட் கல்வி மையம், வாரணாசி, உ.பி.

கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷன் இந்தியா, வாரணாசியில் பெண்களுக்கான கல்லூரி ஒன்றை நடத்தி வருகிறது. மாணவிகளை, பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகம் நடத்தும் B.A. (Hons), B.Ed. மற்றும் M.A. பட்டங்களுக்கான தேர்வுகளை எழுத தயார் செய்து வருகிறது. இக்கல்லூரியில் இரண்டாயிரம் மாணவிகள் பயின்று வருகிறார்கள். இவர்களில் இருநூறு மாணவிகள், கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்கிறார்கள். மற்றவர்கள், கல்லூரி பேருந்தில் நகரத்திலிருந்து வந்து பயில்கிறார்கள். இங்கு, கலை, வணிகவியல், சமூகவியல், மற்றும் கல்வியியல் ஆகிய துறைகளில் மாணவிகளுக்குப் போதிக்க எழுபது ஆசிரியர்கள் பணி புரிகிறார்கள். மத்திய அரசாங்கத்தின் பொருளுதவியை U.G.C. மூலம் இக்கல்லூரி பெற்றுவருகிறது. 1913-ம் ஆண்டு அன்னி பெசன்ட் அம்மையாரும், ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் இக்கல்லூரியை நிறுவினார்கள். வாரணாசியில் கங்கையும் வருணாவும் சங்கமிக்கும் ரம்மியமான சூழலில் இக்கல்லூரி அமைந்துள்ளது.

01.07.2015-ல் இக்கல்லூரியின் முதல்வர் பதவி இடம் காலியாகப் போகிறது. இப்பதவிக்கான விளம்பரங்கள் தேசிய நாளேடுகளில் மத்திய அரசு மற்றும் U.G.C. விதிமுறைகளின் படி வெளியிடப்படும். பல்கலைக் கழக விதிகளின்படி தேர்வுக்குழுவால் பணி நியமனம் செய்யப்படும். பேராசிரியர்களுக்கு U.G.C. நிர்ணயித்த சம்பள விகிதப்படி, ஊதியம் வழங்கப் படும். வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான வயது வரம்பு, அறுபத்தைந்து.

முனைவர் பட்டமும், கல்லூரி/பல்கலைக்கழகத்தில் பாடம் நடத்திய பதினைந்து வருட அனுபவமும் உள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப் பிக்கலாம். ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கல்வி பற்றிய தொலை நோக்குப் பார்வை பற்றிய புரிதலும், அவ்வழியில் ஈடுபாட்டுடன் செயல்படுவதற்கான உறுதியும் உள்ளவர்கள், வாழ்க்கையில் தங்களின் ஆர்வம், இலக்கு மற்றும் குறிக்கோள் ஆகியவற்றையும் தெரிவித்து, தங்களைப் பற்றிய விவரங்களோடு கூடிய விண்ணப்பத்தை (ஆங்கிலத்தில்) அஞ்சல் மூலமாக, செயலாளர், கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷன் இந்தியா, 124-126, கிரீன்வேஸ் சாலை, சென்னை - 600 028, என்ற விலாசத்திற்கோ, மின்னஞ்சல் மூலம்: kfihq@kfionline.org என்பதற்கோ, அனுப்பி வைக்கவும்.

*Published in February, June & October.*
*Registered with The Registrar of Newspapers for India under No. TNTAM/2006/17823*

Periodical

*If undelivered please return to:*
KRISHNAMURTI FOUNDATION INDIA
Vasanta Vihar, 124,126 (Old 64, 65) Greenways Road
Chennai - 600 028. Tel: 24937803/24937596
E-mail: publications@kfionline.org
Websites: www.kfionline.org / www.jkrishnamurti.org

*Published by Dr. V. Aravind on behalf of the Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124, 126 (Old 64, 65) Greenways Road, Chennai - 600 028. Printed by N. Subramanian at Sudarsan Graphics Offset Press, 27 Neelakanta Mehta Street, T. Nagar, Chennai – 600 017. Editor: K. Krishnamurthy*